செ.வெ.எண்: 342 நாள்: 10.08.2021

# பத்திரிக்கை செய்தி

தற்போது கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் கோவிட்-19 பெருந்தொற்றின் வேகம் அதிகரித்துள்ளதாலும், அப்பகுதிகளில் டெல்டா பிளஸ் திரிபு வைரஸ் தாக்கம் அதிகம் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளதாலும் கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களிலிருந்து நீலகிரி மாவட்டத்திற்குள் வரும் பயணிகள் கட்டாயமாக இ-பதிவு அனுமதி சீட்டுடன், 72 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட கொரோனா பரிசோதனை (RTPCR Negative) சான்று அல்லது இருமுறை கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டதற்கான சான்று ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை காண்பித்த பின்னரே சோதனை சாவடிகளில் அனுமதிக்கப்படுவர். அவ்வாறு கொரோனா பரிசோதனை சான்று அல்லது தடுப்பூசி சான்று இல்லாத நபர்கள் மாவட்டத்திற்குள் அனுமதிக்கப் படமாட்டார்கள். மேலும், சோதனை சாவடிகளில் பயணிகளின் உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்பட்டு, பயணிகளது சுய முகவரி விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, பின்னரே மாவட்டத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும், மாவட்டத்திற்குள் நுழையும் பயணிகள் கட்டாயமாக முகக்கவசம் அணிந்து வரவேண்டும். அவ்வாறு அணியாத நபர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதுடன் அவர்கள் மாவட்டத்திற்குள் நுழைய அனுமதி மறுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா தலங்கள் அனைத்தும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும். எனவே, தேவையற்ற பயணங்களை தவிர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும், அவ்வாறு நீலகிரி மாவட்டத்திற்குள் நுழையும் வெளியூர் பயணிகள் அரசின் கொரோனா கட்டுப்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

முகக்கவசம் அணிதல், கிருமி நாசினி மூலம் அடிக்கடி கைகளை சுத்தம் செய்தல், சமூக இடைவெளி கடைபிடித்தல் ஆகியவற்றை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் கண்காணிப்பு குழுக்கள் மூலம் அபராதம் விதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், நீலகிரி மாவட்டத்தில் பிளாஸ்டிக் பயன்பாடு முற்றிலும் தடைபடுத்தப்பட்டுள்ளதால் வெளியூர் பயணிகள் மாவட்டத்திற்குள் நுழையும் போது எவ்வித பிளாஸ்டிக் பொருட்களையும் கொண்டு வர அனுமதியில்லை. இது தொடர்பாக சோதனை சாவடிகளில் அனைத்து பயணிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு கடுமையான அபராதம் விதிக்கப்படும் என்பதை அறிந்து பயணத்தை திட்டமிடும்போது பிளாஸ்டிக் பொருட்களை எடுத்து வரவேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.